விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 தை 17 றவி சுகிர 4 இதழ் 348

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30.1.82

சிமெந்து தொழிற்சாலை தாக்குதல் சம்பவம்:

## காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மூன்றும் கட்ட வேலைத்தளத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது சிமெந்து தொழிற்சாலையின் முக்கிய தொழில்நுட்பஅதிகாரிகள் உட்பட சுமார் 15 தொழிலாளர்கள் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் தவிர தாக்குதலுக்குள்ளான வேறுசிலர் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை அரசினர்ஆஸ்பத்திரியில் இப்பொழுது சிவில் எஞ்ஜினியர்கே.யோகேந்திரா, ஆண் தாதி எஸ்.நிர்மலநாதன் மற்றும் தொழிலாளியான எஸ். மகாலிங்கம் ஆகியோர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இங்கு சிகிச்சை பெற்ற ஏனையோர் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனனர். யாழ் ஆஸ்பத்திரியிலும் சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (மா)

## இங்- இந்தியா 6-வது டெஸ்ட்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும், இங்கிலாந்திற்குமிடையேயான 6-வது கிரிக்கட் டெஸ்ட் இன்று கான்பூரில்ஆரம்பமாகிறது. டெஸ்ட்டின இறுதி நாள் பெப்ரவரி 4ம் திகதியாகும். ஆட்டத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். மாவட்டத்தில் ஆறுமாதகால இடைவெளியின் பின்னர்

# பொலிஸ் ரோந்து நடவடிக்கை

# மீண்டும் ஆரம்பம்

## கைதானவர்களிடமிருந்து

### முக்கிய விபரங்கள் கிடைத்துள்ளதாம்

(யாழ்ப்பாணம்)

**கடந்த ஆறு மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் இரவு-பகல் ரோந்து நடவடிக்கைகள், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் பொலிசார் நேற்றுமுன் தினம் முதல் ரோந்து சுற்றத் தொடங்கியுள்ளனர்.**

கடந்த வருடம் ஜூலை மாதம் 29ம் திகதி இரவு ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு 22 துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஆறு பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டு பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனாலும் யாழ். மாவட்டத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இப்பொழுது அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன.

**புத்தூர் நகை - பணம் கொள்ளை**

நிலைமை இவ்வாறிருக்க புத்தூரைச் சேர்ந்த நவக்கிரியில் கடந்த 22-ந் திகதி இரவு இளையதம்பி வேலுப்பிள்ளை என்பவரின் வீட்டில் 150 பவுண் நகைகளும், ரொக்கம் அறுபதினாயிரமும் 7 பேர் கொண்ட கோஷ்டியொன்றினால் துப்பாக்கி முனையில் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்ததே. இக்கொள்ளை சம்பந்தமாக சுன்னாகம் பொலிசார் தீவிரவிசாரணை நடத்தியதன்பேரில் வசாவிளானில்வைத்து ஒருவரைக் கைது செய்துதொடர்ந்துவிசாரணைக்குட்படுத்தினர். விசாரணையில் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் கடந்த புதன்கிழமை இரவு இளவாலையிலுள்ள வீடொன்றைச் சோதனையிடச் சென்றபோது தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் மூவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து ஒரு சுழல் துப்பாக்கியும், ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

அரசு -- கூட்டணி

## உயர்மட்டப் பேச்சுக்கள் மீண்டும் நாளை மறுதினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் ஜனாதிபதிக்குமிடையே நாளை மறுதினம் நடைபெறும் உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் போது, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் கீழ் ஊர் காவல் படை அமைப்பதுபற்றி முடிவுசெய்யப்படவிருக்கிறது.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் இப்பேச்சு வார்த்தையில் கூட்டணி எம். பிக்களுடன் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசாவும் கலந்து கொள்வார்.

கூட்டணியினர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள 5 அம்சக் கோரிக்கைளில் ஊர்காவல் படை அமைப்பதும் ஒன்றாகும் என்பது தெரிந்ததே. (மா)

சிமெந்து தொழிற்சாலை

## ராணுவ தாக்குதல்:

### ஜனாதிபதிக்கு 'அமிர்' கடிதம்

(கொழும்பு)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இத் தொழிற்சாலையின் 3ம் கட்டப்பகுதியில் இராணுவத்தினர் எவருடைய அனுமதியுமின்றி பிரவேசித்து அங்கு கடமையாற்றிய அதிகாரிகளையும், ஊழியர்களையும் தாக்கியது மிலேச்சத்தனமான செயலாகுமென்றும் இது தொடர்பாக உடன்நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 10ம் திகதி முதல் 14ம் திகதி வரை நடைபெறும் என்று ஆலய மூப்பனர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு காலரா நோய் காரணமாக கச்சதீவு திருவிழா நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சிமெந்து கூட்டுத்தாபன தலைவர் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிமெந்து கூட்டுத்தபானத் தலைவர் திரு. அசோகா சோமரத்ன நேற்று காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு திடீர்விஜயம் செய்தார்.

சிமெந்து தொழிற்சாலையின் மூன்றுவது கட்டவேலைத் தளத்தில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள்பற்றி நேரில் சேட்டறிந்த அவர்; அடுத்த மாதம் 5ம் திகதி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர திரு. சிறில் மத்தியூ விஜயம்செய்வது தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

காங்கேசன் நடேஸ்வரா கல்லூரி மனையியல் கூடம்:

## 6-வது தடவையாக கொள்ளையிடப்பட்டு தீவைக்கப்பட்டது!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மனையியல் கூடம் ஆறுவது தடவையாக உடைக்கப்பட்டு அங்குள்ள பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன்தீயிட்டும் கொளுத்தப்பட்டுள்ளன.

இது திருடர்கள் செயலா? அல்லது விஷமிகள் செயலா? என்பது குறித்து பொலிசார் இப்பொழுது ஆராய்ந்துவருகின்றனர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மனையியல்கூடம் அடிக்கடி உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இதுவரை ஐந்து தடவைகள் இந்த மனையியல் கூடம் உடைக்கப்பட்டது.

தற்போது ஆறுவது தடவையாகவும் இந்த மனையியல் கூடம் உடைக்கப்பட்டு தீயிடப்பட்டுள்ளது. அங்கிருந்த அலுமாரியொன்று எரிந்து சேதமடைந்தது. இதுகுறித்து அதிபர் திரு. க. குலசேகரம் காங்

(8-ம் பக்கம் பார்க்க)

Ask Your Newsagent For

SATURDAY REVIEW

### மணிவாக்கு

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புள்ளார் கோமான்
இந்திரனே சாலும் கரி. — குறள்

# நமது நோக்கு

## கவிஞரும் கவிதையும்

"அவருடைய பலவகைச் செயல்களும் முற்போக்கான எழில்மிக்க நல்லிசைப் பாடலாகவே விளங்கின. அவர் பேசிய ஒவ்வொரு சொல்லும், அவருடைய ஒவ்வொரு உறுப்பசைவும், அந் நல்லிசைப் பாடலுக்கு மிகவும் பொருந்திய இனிமை பயந்தன. தம்மை அறியாமலே ஒரு முழு நிறையான கலையின் வடிவமாய் விளங்கினர். அதனுல் அவர் அமர்ந்த இடம் கோயில் ஆயிற்று; நடந்த நிலம் புனிதம் அடைந்தது''.

இவ்வாறு மகாத்மா காந்தியை வர்ணிக்க வேறு யாரால் முடியும்? அவருடைய அரசியல் 'வாரிசு ஆன நேரு அவர்களே!

மகாத்மாகாந்தி எவ்வகையிலும் கவிஞர் அல்லர்; ஆனுல் அவருடைய வாழ்க்கை ஒரு சிறந்த கவிதையாகவே அமைந்திருக்கிறது.

இக்கவிதை இலக்கியத்திற் சிறந்த இலக்கியம்; இதற்கு இலக்கணம்வகுத்த மகாகவி யார்? உலகின் 2500 வருட நாகரிக சரிதையைப் புரட்டிப் பார்த்தால் தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழ் முனிவர் திருவள்ளுவர் தென்படுவது தெளிவு.

படைச்செருக்கில் இன்னும் நம்பிக்கைகொண்ட உலகுக்கு மக்கள் உரிமைகளை மறுத்து அடக்கி ஒடுக்கும் கொள்கையில் உறுதி கொண்ட ஆட்சிக்கு வள்ளுவப் பெருந்தகை கூறுவது; வெறும் படையாற்றலைக் காட்டிலும் ஆன்மபலமே மேலானது! மகாத்மாகாந்தி அதனை அரசியல் வாழ்வில் வாழ்ந்து காட்டினர்.

அரசியல்துறையில் மகத்தான ஒரு புதுநிலைமையை உலகத்துக்கே உண்டாக்கி நிலைபெறச்செய்துவிட்டார். வல்லரசுகள் தாம் இழந்த ஆதிக்கத்தை எவ்வாறு கைப்பற்றலாம் என்று தடம்புரண்டுகொண்டிருக்கும் இவ்வேளையிலும், எந்தச் சமூகத்தையும் வேற்று நாட்டவரோ வேற்றுஇனத்தவரோ அடக்கி ஆளமுடியாத நிலைமையை உண்டாக்கிவிட்டார்.

எந்தச் சமூகமும் தன் சம்மதத்தை கொடுத்துத்தான் உண்மையில் அந்நிய ஆட்சிக்கு உட்பட்டு வருகிறது; சம்மதத்தை மறுத்துவிட்டால், அவ்வித அநியாய ஆட்சி முடியாத காரியம். இதற்கு ஆயுதங்களோ பயங்கரவாதமோ வேண்டியதில்லை. இணங்காமல் இருப்பதே மறுப்பாகும்.

ஆயினும் ஆயுதத்திலும் வலிமைமிகுந்த பண்பு வேண்டும். துன்பத்தைத் தாங்கும் சக்தியும் பொறுமையும் திரட்டிக்கொள்வோருக்கு அடிமைநிலையைத் தீர்க்கும் யுத்தம் இதுவே.

கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்ட ஒவ்வொரு கட்டமும் மலையேறுவதற்கு ஒரு படியாகும். ஏறின ஒவ்வொரு படியும் சிரமம் தந்ததாயினும் மலை முடியை நெருங்கினேமே என்கிற இன்பத்துடன் நம்பிக்கையையும் தரும்.

இந்தியாவிலே இதனை நிருபித்த மகாத்மாகாந்தி உலகில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையும் நோக்கிப் பணி செய்தார். அதன் பயன் உலகம் முழுவதற்குமே பரவிற்று.

எந்தச் சாதாரண மனிதனும், பகுத்தறிவுடனும் தளராத முயற்சியுடனும் செய்யக்கூடிய வகையில், எவ்வித அற்புதச் சக்தியும் இன்றி படிப்படியாக அடியெடுத்து வைத்து வெற்றி கண்டதே அவருடைய வாழ்க்கையின் சிறப்புப் பாடமாக அமைகிறது.

இம்முயற்சியின் வெற்றிச் சிகரத்தில் நின்றபோது மனித சாதனையைக் கடந்து நிற்கும் தனிப்பிறவியாகவும் தோற்றம் அளித்தார்

ஆயினும் சாதாரண மனிதன்இவ்வளவையும்செய்தானென்பதைக் கண்டோமல்லவா? இதனுல் உண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் சாதாரண மக்களுக்கு மதிப்பற்ற செல்வமாகும்.

மற்றும் தலைவர்களுக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கும் காந்தி மகானுக்கும் ஒரு பெரிய வித்தியாசம்; தான் அடைந்த சக்தியையும் ஞானத்தையும் நம்பிச் சரணுகதி முறையைக் கைவிட்டாரில்லை.

அனைத்தும் உன்னுடையதென்று ஆண்டவனுக்குப் பணியையும் தன்னையும் அர்ப்பணம் செய்தார். 'காந்தீயம்' என்ருெரு புதுத் தத்துவத்தைக் கண்டுபிடித்தவரல்ல அவர்; இதனையே இன்று உலகம் காந்தீயம் என்று கொள்கிறது.

'கடவுள்', 'கடவுட்பக்தி' என்ருெரு பூசைப் பண்டம் உண்டென்று அவற்றைத் தனித்து வைத்து அரசியல், வியாபாரம், தினசரி வாழ்க்கை இவைகளைத் தருமத்துக்கு மாறுன வழியில் நடத்தி, சமூகத்தைச் சீர் கெடுக்கும் அறிவிலிகள் இன்றைய தினத்தில் படிக்க வேண்டிய பாடம்; அனைத்துக்கும் தருமமே உரைகல்.

## மக்கள் கருத்து

### நல்லூர் இராஜதானி

அண்மைக்காலமாக வவுனியா கச்சேரிக்கு அண்மையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை பற்றி நமது அரசியலாளர் ஜனுதிபதிவரை பேச்சுவார்த்தை நடத்துகிருர்கள். ஆனுல் உலகத்திலேயே சேர, சோழ, பாண்டியரின் ஆட்சியின் வீழ்ச்சிக்குப்பின் நல்லூரிலே கோலோச்சிய சங்கிலிய மன்னரின் நல்லூர் இராஜதானியின் தற்போதைய நிலை பற்றி யாரும் அறியாதிருப்பது வெட்கத்தையும் வேதனையையும் நல்குகிறது. 'தமிழ் மண்ணென்றும் தாயகமென்றும் இராஜதானியென்றும் கூறுவதற்குரிய தடயங்கள் யாவும் தினமும் அழித்து ஒழிக்கப்படுகிறது. சங்கிலிய மன்னனின்

(7ம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவு மாவட்ட சரித்திரக் கலாசார விபரங்கள்

த. மார்க்கண்டு

முல்லைத்தீவுமாவட்டம்புதிதாக அமைக்கப்பட்ட தொன்ருகும். இது இந் நாட்டின் வரலாற்றுப் புகழ் பெற்ற வன்னிப்பிரதேசத்தை உள்ளடக்கியது. யாழ்ப்பாண ராஜ்யம், ராஜரட்டை ராஜ்யம், ருகுனை ராஜ்யம், கண்டி ராஜ்யம் போன்று இதுவும் ஒரு தனிராஜ்யப் பிரிவினைக் கொண்டுள்ளது. இது சரித்திரம்.

யாழ்ப்பாண மாவட்டம், வவுனியா மாவட்டம் மன்னுர் மாவட்டம் என்ற மூன்று நிர்வாக மாவட்டங்களில் இருந்து எடுக்கப்பட்ட நிலப்பிரதேசத்தைக்கொண்டதாகும். கிளிநொச்சி தேர்தல் தொகுதி, மன்னுர் தேர்தல் தொகுதிகளின் பகுதிகளையும் முல்லைத்தீவு, தேர்தல் தொகுதியையும் கொண்டதாக இதுஅமைக்கப்பட்டது. முல்லைத்தீவுதொகுதி 1977லும், முல்லைத்தீவு மாவட்டம் 1978லும் ஏற்பாடு செய்யப்பட்டவை.

தற்போது இந் நிர்வாக மாவட்டம் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இருக்கின்றது. மறுபுறம் இந் நிர்வாக மாவட்டத்துக்கென்று தனியே ஒரு மாவட்ட அபிவிருத்திச் சபையும் இயங்குகிறது.

### கிராமங்களில் சனத்தொகை

முல்லைத்தீவில் நான்குஉதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இருபத்தியாறு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. முன்னூற்றிபதினொரு கிராமங்கள் உள்ளன. 1971ல் சனத்தொகை 43625 ஆகவும், 1981ல் 77512 ஆகவும் ஆகவும் உள்ளது. பெரிய நீர்ப்பாசனத்தில் 12638 ஏக்கரும் சிறிய நீர்ப்பாசனத்தில் 7015ஏக்கரும் சிறிய நீர்ப்பாசனத்தில் 19045 ஏக்கரும்உள்ளனகமத்தொழில் சட்டத் தொழில், கால் நடை வளர்ப்பு ஆகியன மேலான தொழில்கள். இது கிட்டத்தட்ட 1600 சதுர மீற்றர் பரப்பானது. 1979ல் வாக்காளர் தொகை 31802 ஆகும்.

விசுவமடுக்குளம், உடையார்கட்டு, முத்தையன்கட்டு, வவனிக்குளம், அம்பலம் பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், ஐயன் குளம், தண்ணீர் றிப்புப் போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இங்கே காணப்படுகின்றன.

சூரியன் ஆறு, கனகராயன் ஆறு, பாலி ஆறு, பறங்கி ஆறு ஆகியன இதன் ஊடாகச் செல்கின்றன.

புராதன கோயில்கள்-வற்ருப்பளை அம்மன் கோவில், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவில் இவற்றுள் அடங்கும்.

ஒரு இனத்தவருக்கு பேசும் மொழியுண்டு. மொழி வழங்கப்படும் நிலமும் உண்டு. மொழியும், நிலமும் இருக்கும் இடத்தே அதற்கான கலை கலாச்சாரம் பண்பாடு இருக்கும். இவற்றை எடுத்துக் கூறுவதற்கே வரலாறு, சரித்திரம் பெரிதும் உறுதுணைபுரிகின்றன. அழிவுபெற்ற கட்டிடங்கள் சிற்பக் கலையை விளக்குகின்றன.கோவில்களும் அமைப்புக்களும் எடுத்துச் சொல்கின்றன. குள்க்கட்டுகள் பொறியியலை உணர்கின்றன. வயல்களும், வாய்க்கால்களும் தரை அமைப்பை அறியும் நில அளவை அறிவை அறிவிக்கின்றன.

சில காலத்தால் அழிவுற்றன; அழிக்கப்பட்டன; சில கால வெள்ளத்தால் அழியாது இன்றும் நிலைபெற்றுவருகின்றன. சில எழுத்து வடிவில் ஏட்டிலோ அன்றி அச்சுப்பிரதிகளாகவோ உள்ளன; சில செவி வழியாக வந்துள்ளன. இன்னும் சில கற்களில் பதிக்கப்பட்ட கல்வெட்டுக்களாகக் காணப்படுகின்றன.

சரித்திரமேன்? என்று கேட்டால் அதற்குக் கூறக்கூடியது யாது என்ருல் சரித்திர வழி எமது முதாதையரின் எம்மினத்து வாழ்க்கை முறைகள் கைக்கொண்ட வழிவகைகள்; அவர்களின் பழக்கங்கள் ஒழுக்கங்கள், ஆசாரம், கலை, கலாச்சாரம், பண்பாடு எவை என்பதை அறிய அவசியம் என்பதாகும்.

புதியன ஆக்கப்படுவதுடன், புதிதாகச் சேர்க்கப்படுவதுடன் பழையன எவை என்பதனையும் தெரிந்து, அதனுல் நாம் அடையக்கூடிய பலாபலன்களையும் பெறவேண்டும். சரித்திர வழியாக நம்மவர்களின் ஆற்றலையும் திறனையும் அறியலாம். சரித்திரக் குறிப்புகள் ஆராய்ச்சி செய்வோருக்கு மட்டுமன்றி எம்மைத் திருத்தி நடக்கவும் எமது அறிவையும், ஆற்றலையும், வளத்தையும் செம்மைப்படுத்தவும் உதவும்.

### கலாச்சாரம் பண்பாடு

பெண்கள் திலகம் இடுவது, மணமகளுக்கு தாலி கட்டுவது சடங்கு கலாச்சாரம் எனலாம். விருந்தோம்புவது பண்பாடு எனலாம். இசை, பாட்டு, நாடகம், நடனம் ஆகியவை கலை எனப்படலாம். இந்த மாவட்டத்திலே, நிலைத்துள்ள வரலாறு சம்பந்தமான விஷயங்களை மக்களின் உணர்வினுல், அன்பினுல், ஒத்துழைப்பால், சேவையினுல், தியாகத்தினுல் சேர்த்து ஒவ்வொரு பிரிவாகக் கோவை செய்து வைப்பதே முதல் படியாகும். ஆர்வமுள்ளோர், ஈடு

(7ம் பக்கம் பார்க்க)

### காந்தி அஞ்சலி!

குண்டு பட்டும் திடுக்கடைந்து குலுங்கிடாமல்
கொள்கை தரும் ராமஜெபம் ஒன்றேகூறி
கொண்ட மனசாந்தி நிலைகுலைந்திடாமல்
கோணலுற்ற வாய் வெறுத்துக் குளறிடாமல்
அண்டை அயல் துணைதேடி அலட்டிடாமல்
அமைதியுடன் பரமபதம் அடைந்தார்காந்தி
கண்டதுண்டோ கேட்ட துண்டோ
கதைதானுண்டோ
கற்பனையாய் இப்படி ஓர் கவிதான் உண்டே?

—நாமக்கல் கவிஞர்

### தொழுதிடல் மறக்கிலேனே!

இதம் தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதம்திரு இரண்டும் மாறிப்
பழி மிகுந்திழிவுற் ருலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திரதேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்க லேனே.

—பாரதியர்ர்

### மீண்டும் நீ வாராயோ!

காலமகளின் கால ஓட்டத்திலே
தோன்றி விட்ட கவிஞர்களுள்
காலத்தால் அழியாது தமிழினம்
காத்து நிற்கும் கவிஞர்களுள்
மேலோனுய் திகழ்ந்திடும் பாரதியே
மீண்டும் நீ வராயோ.

நானிலத்தில் நின் மைந்தர்
நலிவுற்று தறிகெட்டு
படும் பாட்டை பாரர்யோ
அறிவற்ற மடையர் இலர்
சிறுபேதம் பல காட்டி
சாதிமத பேதம் தன்னை
சாலவே வளர்த்து இன்று
சாக்கடைக்குள் தள்ளுகின்ருர்
தமிழர் தம் ஒற்றுமையை.

சாத்திரங்கள் பல கேட்டு
சரிவரும் சரிவரும் என
விதிதனையே நொந்து கொண்டு
உழைக்காது ஊர்சுற்றி
பணம் சேர்க்க நினைத்திருக்கும்
சோம்பேறிகள் நிறைந்த
தமிழினத்தின் நிலை காண
பாரதியே நீ வாராயோ!

கண்ணிருந்தும் பார்க்காத
குருடனைப் போல்
காதிருந்தும் கேட்காத
செவிடனைப் போல்
வாயிருந்தும் பேசாத
ஊமையைப் போல்
காலிருந்தும் நடக்காத
முடவனைப் போல்
வாழுகின்ற தமிழனுக்கு
வழிகாட்ட
பாரதியே நீ மீண்டும் வாராயோ!

செல்வி க. சரஸ்வதி

# அபிவிருத்தி சபையிடம் கல்வி நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்

## பெற்றோர் சங்கம் யோசனை

(யாழ்ப்பாணம்)

அதிகாரத்தைப் பரவலாக்கி அபிவிருத்திச் சபைகளிடமே கல்வி நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று யாழ். பெற்றோர் சங்கச் செயலாளர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் யோசனை கூறியுள்ளார்.

கல்வி வெள்ளை அறிக்கை தொடர்பாக திரு. பொன்னையா அனுப்பியுள்ள மகஜரின் சில பகுதிகள் வருமாறு;

பல்கலைக்கழக அனுமதி தேசியமுக்கியத்துவம் வாய்ந்த ஒருவிடயம். கல்வி வெள்ளை அறிக்கையில் 83ம் பந்தியில் ''பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சைக்கு இருமுறை மாத்திரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்'' எனக் கூறப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு இரு தடவைகள் மாத்திரம் விடப்படுவது போதுமானதல்லவென யாழ். பெற்றோர் சங்கம் கருதுகிறது; முன்பு போல் மூன்று தடவைகள் குறித்த சோதனையை எடுக்க அனுமதி வழங்கப்படவேண்டுமெனவும் இச்சங்கம் உறுதியான அபிப்பிராயத்தை வெளியிடுகிறது. பின்வரும் காரணங்களுக்காக மூன்று முறை இச்சோதனையெடுக்க அனுமதி வழங்கப்படவேண்டும்:

83ம் பந்தியில் ''பிரவேசப் பரீட்சையில் செய்ததன் அடிப்படையிலேயேமாணவர்கள்பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவர்'' என்று கூறப்பட்டுள்ளது. ''பரீட்சையில் செய்ததன் அடிப்படையில்'' என்ற பதங்கள் திறமை அடிப்படையைக் குறிக்காது. கல்வி வளர்ச்சியடைந்த நாடுகளில் திறமை அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தை அமுல்செய்வதற்கான உடன்பாடுகளையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டபடியால் திறமைத்தேர்வையே எமது அரசும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. என்பதை நடைமுறைப்படுத்துவதே மிகமுக்கியமாகும். இதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்,

### கொத்தணி முறை

பாடசாலைக் கொத்தணி முறை எவ்வாறு இயங்கும் என்று நாம் முன்கூட்டி திடம் சொல்லமுடியாது; அதை நாம் அமுலில் விட்டுப்பார்க்கலாம். பூகோள ரீதியில் இந்தக் கொத்தணியை அமைப்பது அதன் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. குறிக்சப்பட்ட பூகோள எல்லைக்குள் பல மொழிகளைப் பேசும் இனங்கள் வாழலாம். ஒரு பெரும்பான்மை இனம் ஏனைய இனங்களை அடக்கி ஒடுக்கத்தான் எத்தனிக்கும். இது இன மோதல்களை உண்டு பண்ணும். இதனுல் நாட்டு அமைதி; ஒற்றுமை சீர்குலையும்

எனவே ஒரு இனம் அல்லது ஒரு மொழிக்குரிய சமூகத்தைக் கொண்ட பாடசாலைகள் ஒரு கொத்தணியாக அமைதல் வேண்டும். இந்த அமைப்பு சமூக, மொழி, கலாச்சார மோதல்களைத் தவிர்க்கவல்லது பூகோள ரீதியான கொத்தணி முறையைக் கைவிட்டு அதை ஒரு இன அல்லது மொழிஅடிப்படையில் அமைத்தல் மிகமுக்கியமானது. இந்தியாவில் நடைமுறையிலிருந்துவரும் கொத்தணிமுறை இன,மொழி மோதல்களைத் தவிர்ப்பதற்கானமுறையில் அமைந்துள்ளது எமக்கு ஒரு எடுத்துக்காட்டாகவிருக்கிறது.

கொத்தணி முறையால் ஒரு நன்மைபிறக்கும். சமவசதிகள் எல்லாப் பாடசாலைகளுக்கும் அரசு வழங்குவதானுல் எல்லாப் பாடசாலைகளின் கல்வித்தரமும் உயர்ந்து இன்று பல்கலைக்கழக அனுமதியில் ஒரு அங்கமாக அமைந்துள்ள பின தங்கிய பிரதேசத் தேர்வு முறை கைவிடப்படும். எவ்வளவு காலத்துக்கு பின்தங்கிய பிரதேசத்தேர்வு செய்யமுடியும்! இத்தேர்வு நீடிக்குமேயானுல் அரசு சகல பாடசாலைகளுக்கும் சமவசதி வழங்கும் கடமையிலிருந்து தவறுகிறது என்பதுதான் தெளிவாகும்.

### தாய்மொழி

13ம் பந்தியில் போதனு மொழி தாய்மொழி என்று பொறிக்கப்படாமல் 'முதலாவது மொழி' என்றிருக்கிறது. வளர்ச்சியடைந்த எந்த ஒரு நாட்டிலும் போதனு மொழி தாய்மொழி என்றுதான் அரசியல் அமைப்புச் சட்டமும் பிரசித்திபெற்ற கல்விச் சாதனங்களும் கூறுகின்றன.

### அபிவிருத்தி சபைகள்

மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அதிகாரங்கள் கிராம சபைகளின் அதிகாரங்கள் போன்றவையே! கணிசமான அளவிற்கூட அந்த அதிகாரங்களில்லை என்று அதிஉத்தமராகிய நீங்களே ஒரு தூதுக்குழுவிடம் எடுத்துவிளக்கியதாக அறிக்கைகள் கூறின. அபிவிருத்திச் சபைகள் சட்டம் பலத்த அதிகாரங்களை ஜனுதிபதி அவர்களிடமும் மாவட்ட மந்திரிகளிடமுமே விட்டிருக்கிறது. அதிகாரத்தைப் பரவலாக்கி அபிவிருத்தி சபைகளிடமே இந்தக் கல்வி நிருவாகப் பொறுப்பை பெரும்பாலும் கையளித்து, சுமத்தப்பட்டுள்ள இந்தக் குறையை பெருமளவில் தீர்த்துக்கொள்ளலாமே. ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் பிள்ளைகளின் தேவைகளை, அவர்களது மொழி, கலாச்சாரம், மன எழுச்சிகள் முதலானவற்றை அண்ணிப்பாக இருந்து நன்கு அறியக்கூடிய வாய்ப்பிருப்பதனுல் 'அபிவிருத்தி சபைகள் போன்ற ஸ்தாபனங்கள் கல்வி நிருவாகத்தை வரவேற்கத் தக்கமுறையில் நடத்தக்கூடியதாகவிருக்கும்.

146ம் பந்தி இந்த முழுப் பொறுப்பையும் அரசிடமும் மாவட்ட கல்வி அதிகாரிகளிடமுமே விட்டிருப்பதாகக் கூறுகிறது.

இந்நாட்டு இலவசக் கல்வி முறையைப் பாதுகாத்து நடைமுறைப்படுத்துவது அரசினது தலையாய கடமையாகும். எந்த ஒரு திறமைவாய்ந்த மாணவனும், எவ்வளவு வறுமையில் அழுந்தியிருந்தாலும், கல்வி வளர்சியடைந்து எமது சமுதாயத்தில் தனது உரிய இடத்தை வகுக்க வசதியளிக்கப்படல்வேண்டும்.

### பொதுமக்கள் பார்வைக்கு காணி இடாப்புகள்

(புலோலி)

சாவகச்சேரி கமநலச்சேவை நிலையத்திலும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் அலுவலகங்களிலும் நெற்காணி மேட்டுக்காணி இடாப்புகள் பொது மக்களின் பார்வைக்காக பெப்ரவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரையும் வைக்கப்படுமெனவும இதில் திருத்தங்கள் ஆட்சேபனைகள் புதிய பதிவுகள் செய்ய விரும்புவோர் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# சோவியத் மீது அமெரிக்கா தானிய விநியோகத் தடை?

வாஷிங்டன். ஜன, 29

போலந்து நெருக்கடிநிலைமை மோசமடையும் பட்சத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராக தானிய விநியோகத் தடையை அமுல் செய்ய வேண்டி நேரிடும்.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ரொனல்ட் ரீகன் தெரிவித்துள்ளார்.

போலந்து நெருக்கடிகுறித்து தாம் சோவியத் அதிபர் திரு .லியோனிஸ்ட் பிரஷ்னேவுடன் பேச்சு நடத்த விரும்புவதாகவும் திரு. ரீகன் தெரிவித்துள்ளார். (இ)

---

# ரஷ்ய - இலங்கை

## நட்புறவுப் பெருவிழா

மாஸ்கோ, ஜன, 29

இலங்கை சுதந்திர தினத்தையும் இலங்கை—சோவியத் ராஜதந்திர உறவு ஏற்பட்ட 25வது ஆண்டு விழாவையும் ஒட்டி மாஸ்கோவில் அடுத்த மாதம் சோவியத்-லங்கா நட்புறவு பெருவிழா கொண்டாடப்படுகிறது.

10 நாட்கள் நடைபெறும் இவ் விழாவை ஒட்டி மாஸ்கோவில் பல கண்காட்சிகளும் ஏற்பாடாகி உள்ளன.

இவ் விழாவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சோவியத் குழு ஒன்று விரைவில் இலங்கை வர இருக்கிறது. (இ)

---

# நஷ்டஈடு கோருகிறுர்

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் எம்.ஏ.எஸ். கருணுநிதி என்பவர் முன்னுள் கல்வி அதிபதி திரு ரி.மாணிக்கவாசகருக்கும் கல்வித் திணைக்களத்தில் முன்பு கடமையாற்றிய திரு. ஏ. மகாலிங்கத்துக்கும் எதிராக ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி தனித்தனியே வழக்கறிஞர் மூலம் தாக்கீது அனுப்பியிருக்கிறுர். தம்மை நீதிக்குப் புறம்பாக வேலையில் இருந்து இடைநிறுத்தம்செய்ததாக திரு.மாணிக்கவாசகருக்கு எதிராகவும் இதற்கு உடந்தை புரிந்ததாக திரு. மகாலிங்கத்துக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

---

# ரூ. 5. லட்சம் பரிசையும் அன்பளித்தார்!

(கொழும்பு)

மஹாபொல சுவீப் சீட்டிழுப்பின் முதல்பரிசான 5 லட்சம் ரூபா பெறுமதியான பரிசினைப்பெற்றவர், அப்பரிசுப் பணம் முழுவதையும் மஹாபொல புலமைப்பரிசில்நிதிக்கு வழங்க சம்மதித்துள்ளதாக வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். (வெ)

---

ஆக்ரா ரயில் விபத்து:

# ரயில் சாரதி சிக்னல்களை இருதடவை மீறினுராம்

ஆக்ரா. ஜன. 29

ஆக்ராவில் விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகள் வழமையான விதிமுறைகளிற்கு மாருக இணைக்கப்பட்டிருந்ததாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சேத்தி தெரிவித்தார்.

இவ்ரயிலில் அங்கீகரிக்கப்படாத சில பெட்டிகளில் பலர் பயணம் செய்ததாகவும், ரயில் சாரதி இரண்டு 'சிக்னல்'களை மீறிச் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து டில்லி நோக்கிப் புறப்பட்ட 'சதர்ன் எக்ஸ்பிரஸ்' ரயில் நேற்று அதிகாலை ஆக்ரா அருகே மற்றுமொரு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 66 பேர் பலியானதும், 50 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே. [வெ]

---

# மலையகக் கல்வி நிலை: தொண்டமான் விளக்கம்

[கொழும்பு]

''தோட்டப் பகுதிகளில் கல்வி கற்கும் நிலையிலுள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களில் 75ஆயிரம் பேர் மட்டுமே பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களிலும் பெரும்பாலானேர் இடையிலேயே தமது கல்வியைத் துறந்துவிடுகின்றனர்.''

இத்தகவலை கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

மலையக மக்களின் கல்வி சம்பந்தமாக ஆராய்வதற்காக கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

மலையகத்தில் போதிய பாடசாலைக் கட்டிடங்களும் ஆசிரியர்களும் இல்லாததன் காரணமாகவே அந்த மக்களுக்குப் போதிய கல்வி புகட்ட முடியாத நிலை இருந்து வருகிறது என்றும் தெரிவித்த திரு. தொண்டமான் மேலும் கூறியதாவது:-

''ஆசிய நாடுகளில் கடந்த நூற்றுண்டு காலமாக அமுலிலிருந்து வரும் கல்வி முறை எமது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகவில்லை.'' [இ]

---

தபாலதிபர்களுக்கான

# சட்டப் புத்தகங்கள் தமிழிலும் வெளிவரும்?

(மட்டக்களப்பு)

தபால் அதிபர்கள், உப தபாலதிபர்களுக்கான சட்டப் புத்தகங்களை தமிழில் அச்சிடுவதற்கு அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தபால்துறை சம்பந்தமான பிரச்னைகளையிட்டு மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் தலைமையில் அமைச்சரைச் சந்தித்த குழுவிடமே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் உறுதியளித்தார்.

செங்கலடி தபால் அலுவலகத்திற்கான புதிய கட்டிடம் ஒன்று அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. கே. நவரத்தினம் தபால் அதிபர் திரு. இ. திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

### கும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக விழா இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

விஷேட அபிஷேக ஆராதனைகளை அடுத்து சுவாமிகள் வீதிவலம் வருவார். (இ)

---


# உண்டியல் உடைத்து திருட்டு: சந்தேக நபருக்கு றிமாண்ட்

[புலோலி]

பிள்ளையார்ஆலயத்தில் உண்டியல் பெட்டியை உடைத்துப் பணத்தைத் திருடியவரும்,வயிரவர் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மானியைத் திருடியவருமான நபரொருவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

புலோலி புற்றளைப் பிள்ளையார் ஆலயத்தில் உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தைத்திருடியதாகவும் புலோலி தெற்கு தோட்டத்து வைரவர் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மானியைத் திருடியதாகவும் புலோலி தெற்கைச் சேர்ந்த கந்தையா விஞசித்தம்பி என்பவருக்கு எதிராகப் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது. இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளில் ஈடுபட்ட பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி திருடப்பட்ட மின்மானியுடன் சந்தேகநபரான விஞசித்தம்பியைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு.கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தது.

நீதவான் சந்தேக நபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். [இ]



# தெல்லிப்பளையில் இன்று முதல் புற்றுநோய் சிகிச்சை

## சிகிச்சை நிலைய அபிவிருத்திக்கு நிதி உதவி கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை நடந்து வந்த புற்றுநோய் சிகிச்சை இன்று முதல் தெல்லிப்பளையில் அமைக்கப்பட்டுவரும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறும்.

மகரகமவிலிருந்து யாழ். வரும் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜா குக் 2 வாரங்களுக்கொருதடவை தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரி வளவில் அமைக்கப்பட்டுவரும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் தொடர்ந்து சிகிச்சை அளிப்பார்.

புற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் இதுவரை முடிவடைந்துள்ள கீழ்மாடிக்கட்டிடத்திலேயே இச்சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் இச்சிகிச்சை நிலையத்தின் ஆய்வு கூடம் அமைப்பதற்கும் தளபாடங்களுக்கும் 5 லட்சம் ரூபாவரை தேவைப்படுவதாகவும் இதற்கு நிதிஉதவி வழங்க பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும், தனியார் நிறுவனங்களும் பணம் படைத்தோரும் முன்வரவேண்டும் என்றும் யாழ். மாவட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கான சபையின் இணைச்செயலாளர்களில் ஒருவரான டாக்டர் எஸ். சபாரத்தினம் தெரிவித்துள்ளார்.

16 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இச் சிகிச்சைநிலையத்திற்கான முழு நிதியையும் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர்.

இந்நிலையத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 'கோபால்ட்' சிகிச்சைக் கருவியை அரசாங்கம் இவ்வாண்டு மே மாதமளவில் வழங்கும் என்றும் ஆகஸ்ட் மாதத்தில் இச் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினர்.

இச்சிகிச்சை நிலையத்திற்கு இதுவரை வடமாகாண புற்றுநோய் சங்கம் ஒரு லட்சம் ரூபாவையும் யாழ். லயனஸ் கழகம் 80ஆயிரம் ரூபாவையும் யாழ்.ரோட்டரி கழகம் 50 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இப்போது இந்நிலையக் கீழ் மாடிக்கட்டிடத்துக்குத்தேவையான ஆய்வுகூட உபகரணங்களுக்கும், தளபாடங்களுக்குமான நிதி உதவியை புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான சபையின் செயலாளர் டாக்டர் எம். சுந்தரலிங்கம், 38, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்றும் டாக்டர் சபாரத்தினம் தெரிவித்தார். (இ)

[இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சை நிலைய மாடிக் கட்டிடத்தின் கீழ் பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்]

# விவசாய உற்பத்தியாளர் விபரம் சேகரிக்கப்படுகிறது

(புலோலி)

யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம், விவசாய, உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் நோக்குடன் உற்பத்திசெய்துவரும் விவசாய உற்பத்தியாளர் பற்றிய விபரங்களைத் திரட்டிவருகின்றது.

ஒவ்வொருபாவனையாளர்கள் சங்கப் பிரிவுகளிலும் சந்தைப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுவரும் மிளகாய், வெங்காயம், பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, மரக்கறி, புகையிலை, திராட்சைப்பழம், வாழை, கோழி வளர்ப்புப் பற்றிய விபரங்களை திணைகளம் திரட்டிவருகின்றது.

யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டுவின் பணிப்பின் பேரிலேயே இநநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

# "கலைஞர், கவிஞர்களின் மதிப்பு உயரவேண்டும்"

- பேராசிரியர் 'வித்தி,

(மாவிட்டபுரம்)

''கலைகள் மக்களுக்காகவே படைக்கப்படுகின்றன. ஆகவே கலைகளின் வளர்ச்சியிலும், அவற்றை பேணுவதிலும் மக்கள் அக்கறை கொள்ள வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் எமது தமிழ்க்கலைகளை வளர்ப்பதன் மூலம் தமிழ்மொழியையும் வளர்த்துக் கொள்ள முடியும்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பிரிவின் ஆதரவில் மருதனுமடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இசை விழாவின் இறுதி நாளன்று பிரதம அதிதியாகக் கலந்துபேசிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

''இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்க்க நாம் முன்வரவேண்டும். இசை விழாக்களும் இசை நிகழ்ச்சிகளுடன் மட்டும் நிற்காமல் இந்த மூன்று அம்சங்களும் இடம்பெறக் கூடியதாக அமைய வேண்டும். சமுதாயத்தில் கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் உள்ள மதிப்பு அதிகரித்தால் தான் அவர்களது ஆற்றல் பெருகும். ஆனல் அவர்களுக்குள்ள மதி

(7 ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை

# புதிய நூலகம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை புதிய நூல்நிலையல் பெப்ரவரி 5ம் திகதி சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட உள்ளது.

2 லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப் புதிய நூல்நிலையம் கடந்த ஒருவருடத்திற்கு மேலாக பூட்டிய நிலையிலேயே இருந்து வந்தது. ஏற்கனவே பலமுறை திறப்பு விழாவுக்கு ஆயத்தம் செய்யப்பட்ட போதும் அது கைகூடவில்லை. இதனை திறந்துவைப்பதில் இழுபறியான நிலை இருந்து வந்தது.

காங்கேசன்துறைப்பகுதியில் சிறந்த, வசதியான நூல்நிலையம் ஒன்று இல்லாத குறையைப்போக்க அமைக்கப்பட்ட இந்நூல் நிலையம் வீணுக பூட்டிக் கிடப்பதைச் சுட்டிக் காட்டி 'ஈழநாடு' ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

2லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய நூலகம் சும்மா தூங்குகிறது'' என்ற தலைப்பில் வெளியான இச் செய்தியை யடுத்து சம்பந்தப்பட்டவர்கள் உஷாராணர்கள்.

நூல்நிலையத் திறப்புவிழா வைபவத்தில்எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் பங்குபற்ற உள்ளனர். இதற்கான ஒழுங்குகளை காங்கேசன்துறை உப அலுவலக நிர்வாக மேற்பார்வையாளர். திரு. க. சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

இலவச பாடப்புத்தகம் வழங்குவதால்

# தேசியசொத்தைபாதுகாக்கும் மனப்பக்குவம் ஏற்படும்

(வண்ணார்பண்ணை)

''இலவச புத்தக விநியோக திட்டத்தின் மூலம் மாணவர் மனதில் எழும் கவலைகள் அற்றுப் போகும் நிலை மட்டுமல்ல பெற்ளோர் மனதில் இருந்த துயரங்களும் அழிந்துள்ளன எனலாம்''

அரசாங்கம் இலவசமாக புத்தகங்களை வழங்கத் தொடங்கி இரண்டுஆண்டுகள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் இத்தினம் கொண்டாடப்பட்டது. வடபகுதி பாடசாலைகளிலும் இந்த இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

யாழ்ப்பாணம் இர்து மகளிர் கல்லூரியில் இவ் வைபவத்தை முன்னிட்டு கல்லூரி அதிபர் செல்வி பி. இராமநாதன் தலைமையில் நடந்த கூட்ட மொன்றில் மேற்படி கல்லூரி ஆசிரியை செல்வி எஸ். குழந்தைவடிவேலு பேசுகையில்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இலவச பாடப்புத்தகத் திட்டத்தினல் தேசிய சொத்துக்களை மாணவர்கள் பாதுகாக்கும் மனப் பக்குவத்தை அடைய முடிகிறது, இது மட்டுமல்ல புத்தகங்கள் வாங்க வசதியில்லாத மாணவர்களையிட்டு ஆசிரியர்களுக்கு இருந்து வந்த கவலைகளும் இதனல் நீங்கியிருக்கின்றன.

எமது நாட்டின் ஜனதிபதி இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்திலேயே இந்த இலவச பாடப்புத்தகம் வழங்குவது பற்றி பிரஸ்தாபித்திருந்தார், அவரது கையில் ஆட்சிப் பொறுப்புவந்ததும் அவர் இதை செயலில் காட்டிவிட்டார் இதன் மூலம் இன்று மாணவர்கள், பெற்ளோர், ஆசிரியர்கள் ஆகியோர் பயனடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்ருர்,

CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் ஞெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.

● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.

● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.

● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.

● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.

1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,

4, உளுப்பிட்டியா வீதி,

கொழும்பு 2

தொலைபேசி: 26558/9

## ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களில்

# போட்டியிடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயார்

### அங்கீகரிக்குமாறு கோரிக்கை

[கொழும்பு]

மக்கள் விடுதலை முன்னணியை அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியாகபதிவுசெய்யுமாறு மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் திரு. லயனல்போபகே, தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு இதுதொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது; நாட்டில் இன்றுள்ள பிரதான கட்சிகளில் மூன்றில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணி இதுகாலவரை அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கடந்த 5 வருடகாலத்தில், பிரதான 3 கட்சிகளில் ஒன்ருக இருந்தபோதிலும், இதுவரை அது அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் சலுகைகளை அனுபவித்ததில்லை. ஆனாலும் ம. வி. முன்னணியை விட சிறிய, அதேவேளையில் தேசியமட்டத்தில் செயற்பாடு அற்ற, தீவு பூராகவும் பரந்தில்லாத அநேக கட்சிகள் உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவிக்கின்றன. சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற வேறு கட்சிகள் அநேகம் இவ்வாறு சலுகைகளை அனுபவிக்கின்றன.

1981 ஜூனில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் எட்டு மாவட்டங்களில் போட்டியிட்ட மக்கள் விடுதலை முன்னணி, 3 லட்சத்து 27 ஆயிரம் வாக்குகளை பெற்றதுடன், 6 சபைகளில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது.

1980, 1981 ஆண்டுகளில் பிரதான பல்கலைக்கழகங்களின் ஐந்தின் தேர்தல்களில் ம. வி. முன்னணி வெற்றியடைந்துள்ளது, மாணவர் சபைகளின் அதிகாரத்தையும் கையேற்றுள்ளது.

நாடு பூராவும் 24 மாவட்டங்களிலும் செயற்படுவதுடன், 2 லட்சத்திற்கு அதிகமான கட்சி அங்கத்தவர்களை கொண்டுள்ளது. அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், அகிலஇலங்கை கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் அகிலஇலங்கை விவசாயிகள் சம்மேளனம், சோஷலிச இளைஞர்சங்கம். சோஷலிச மகளிர் சங்கம் சோஷலிச பிக்குகள் சங்கத்தையும் கட்டியமைத்துள்ள கட்சியாகும். நாடு முழுவதும் ஆயிரத்துக்குமதிகமான முழுநேர ஊழியர் உள்ளனர். கட்சியின் அதிகார பூர்வமான வாரஇதழ 75,000 பிரதிகள் விறபனையாகின்றன.

பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும், மக்கள் விடுதலை முன்னணி போட்டியிட தயாராகவுள்ளது. எனவே எமது கட்சியை அங்கீகரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (க)

## 'இலவசக்கல்வி முறையில் மாற்றம் இருக்காது'

### ஜனாதிபதி ஜே. ஆர். உறுதி

(கொழும்பு)

'இலவசக் கல்வியில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது. நாட்டின் சமூக,பொருளாதாரத்திற்கு இசைவான கல்வித்திட்டமே அமுல்செய்யப்படும்.'

மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தன மியகமவில் இலவச பாடநூல் விநியோக வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

'கல்வி வெள்ளை அறிக்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவதா அல்லது அப்படியே அமுல்செய்வதா என்பதுபற்றி அமைச்சரவை இன்னும் தீர்மானிக்கவில்லை. அப்படியிருக்க இது தொடர்பாக சிலர் மாணவர்களைத் தூண்டிவருகின்றனர்.

'தொழில் நுட்பக் கல்வியை மாணவர்கள் கற்கவேண்டும். இதற்கு ஆங்கிலம் அவசியமாகும். கல்வி வெள்ளை அறிக்கைபற்றிய யோசனைகளை பலவந்தமாக அரசு அமுல்செய்யாது. (வெ)

### மூன்றுநாள் உண்ணாவிரதம்:

## யாழ். மேயர் பழரசம்வழங்கி முடித்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)

1980 ஜூலை பொதுவேலை நிறுத்தத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து 3 நாட்களாக உண்ணாவிரதத்திலீடுபட்டிருந்தவர்களுக்கு, யாழ.மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் நேற்று முன் தினம் மாலை 5 மணிக்கு குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை லங்கா தொழிற்சங்க சம்மேளனக் காரியாலயத்தில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.


நேற்றுமூன்தினம் நடைபெற்ற இறுதி உண்ணாவிரதத்தில் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த திரு. சீலன் கதிர்காமர், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், இலங்கை பெற்ரோ[ு] சங்கத் தலைவர் சட்டத்தரணி சி. பொன்னையா, வடபிராந்திய கூட்டுறவு ஊழியர் சங்கப் பிரதிநிதிகள், மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பிற்பகல் வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அ. வயித்திலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் நா. லோகநாதன், சச்சி அமிர்தராசா, இரா. லோகநாதன், வி.எஸ். கனகரடனம் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. ஆ. துரைராசசிங்கமும் கலந்துகொண்டார். திரு. எஸ். விஜயானந்தன் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து ஆதரவு தெரிவித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். (மா)

## தன்னலமற்ற சேவையாளர்



மலர்ந்த முகம், பெருமை—சிறுமை, ஏழை—பணக்காரன், உயர்ந்தவன் — தாழ்ந்தவன், என்ற வேறுபாடின்றி, சமூகத்தில் சகல பிரிவினரையும் சமமாகவே மதித்துத் தன்னலமற்ற சேவையாற்றிய காரைநகர் புது ரோட்டில் வாழ்ந்த சமாதானநீதவானும், ஆயுள்வேத வைத்தியரும், இறப்பு பிறப்புப் பதிவாளருமாகிய க. இராசசேகரம் மறைந்து ஆண்டுள் இரண்டாகின்றன.

''பரியாரி இராசசேகரம்'' என்று கூறினல் காரைநகரிலே அறியாதவர்கள் இல்லை. தமது சேவைகள் வாயிலாக சமூகத்தின சகல பிரிவு மக்கள் மனதிலும் நீங்காத இடத்தைப் பெற்று விளங்கினர். அவர் தமது பரம்பரைத் தொழிலாகிய ஆயுள்வேத மருத்துவத்துறையில் நிபுணராக விளங்கி வசதியற்ற மக்களுக்கு எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பாராது சிகிச்சையளித்து வந்த தாராளசிந்தை படைத்த பெருமகன். காரைநகரில் இவர் அங்கம்வகிக்காத சமய சமூக சேவை ஸ்தாபனங்கள் இல்லை, நீண்டகாலமாகக் காரைநகர் கிராமசபை உறுப்பினராகவும் பின்னர் அதன் உபதலைவராகவும் இருந்து கிராமத்தின்வளர்ச்சியில் காட்டிய அக்கறையும். காரைநகர் மகாசபை, காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர்ச் சிவன்கோவில் அன்னதானச் சபை காரைநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் பொறுப்புமிக்க பணிகளை ஏற்று அவற்றின் வாயிலாக ஆற்றிய பணிகளும் குறிப்பிடத்தக்கன.

இன்று அன்னரின் இரண்டாவது சிரார்த்த தினமாகும் பிற்டகல் மூன்று மணியளவில் அவரது நினைவு அஞ்சலியும் ''சித்த வைத்திய பரம்பரை'' என்னும் புத்தக வெளியீடும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும்.

- கே. சிவகுமரன்

### கொடிக்காடு அணைக்கட்டை கட்ட அனுமதி

(புலோலி)

வரணி இடைக்குறுச்சி பயிர் செய்கை உத்தியோகத்தர் பிரிவில் சிறு நீர்பாசன திட்டத்தின் கீழ் கொடிக்காடு அணைக் கட்டைக்கட்டுவதற்கு கமநலச் சேவை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## தாய் கண்டித்தார்; மகன் நஞ்சுக்கு பலியானர்!

(மாவிட்டபுரம்)

ஊதாரியாகத் திரிந்த மகனை தாயார் கண்டித்ததால் மனமுடைந்த அவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச்சேர்ந்த சவரிமுத்து மக்ஸி (23 வயது) என்பவரே இவ்வாறன முடிவை எடுத்தவராவார்.

இவர் வேலை எதுவுமின்றி இருந்தார். அடிக்கடி படம் பார்ப்பதும் வெளியில் சுற்றுவதுமாக இருந்தார், இவரது ஊதாரித்தனத்தைக் கண்டு தாயார் பலமாகக்கண்டித்தார் இதனல் மனமுடைந்த இவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

மரண விசாரணையில் இவ் விபரங்கள் தெரியவந்ததையடுத்து திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தம்பிராசா தற்கொலை என தீர்ப்பளித்தார்.

சுன்னகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

### சங்காபிஷேகம்

(புலோலி)

மாதனை ஸ்ரீ காளி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் அடுத்த மாதம் 6ம் திகதி நடைபெற உள்ளது.

10ம் திகதி அன்னதானமும் நடைபெறும். (இ)

### கால்நடைகளை அவிழ்த்து விடுவதற்கு

## தடை

[யாழ்ப்பாணம்]

பூனகரி உதவி அரசாங்க அதிபர் பகுதியில் செட்டிய குறிச்சி, கொல்லக் குறிச்சி, மட்டுவில்நாடு, கறுக்காய்தீவுப் பகுதிகளில் பெருமளவில் எள்ளு, பயறு, உழுந்து போன்ற சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக 1982ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதிவரை கால்நடைகளை அவிழ்த்துவிடுதல் இங்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர யாழ். மாவட்டத்தின் மற்றைய உதவிஅரசாங்க அதிபர்பிரிவுகளிலிருந்தும் பூனகரிப் பகுதிக்கு சங்குப்பிட்டித் துறையூடாகவும், பரந்தன், மன்னர்வேறெந்தபாதைகளூடாகவும் கால்நடைகளைக் கொண்டு செல்லல் 1982ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி வரை தடைசெய்யப்பட்டுள்ளது. கட்டாக்காலி கால்நடைகள் காணப்படின் அவை கைப்பற்றப்படும். இக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது பாரதூரமான நடவடிக்கை எடுக்கப்படும் என உதவி அரசாங்க அதிபர் திரு. ரி.வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.


# அசொட்ரின்

நெல், மிளகாய், வெங்காயம் மரக்கறி, பருத்தி, புகையிலை ஆகியவற்றில் காணப்படும் பீடைகளின் முற்றழிப்பிற்கு அசொட்ரின் 60 பாவியுங்கள்.




சகல, லங்கெம் விவசாய சேவை நிலையங்களிலும் கிடைக்கும்

50 மி. லீ. ரூபா 18-90
தொலைபேசி: 598292-6

8 வது-மகத்தான வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
பட்டாக்கத்தி
பைரவன்

Regal Cinema
(Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
30 — 31
COCK FIGHTER
(Color)

12 - 2 - 82
முதல்
தனிமரம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்னும் சிலதினங்கள். மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

ஸ்ரீதர் 3—2—82 வரை
யாழ். நகர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
கமலஹாசன் - ஸ்ரீபிரியா
சட்டம் என் கையில்
(புதிய பிரதி)
4—2—82 முதல்
பட்டிக்காடா பட்டணமா

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
135 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

இன்று மகத்தான 50-வது வெற்றித் திருநாள்
ராஜா (யாழ். நகர்)
சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
From 30-1-82 Grand Gala Release
'Airport '80 – The Concorde'
tarring : Alain Delon. George Kennedy
Susan Blakely.

இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றனர்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றனர்கள் என்பதை வெண்திரையில் காண்க.

# இன்றைய பலன்

தை மாதம் 17 ம் திகதி
சனிக்கிழமை
(30—1—82)

மேடம்: பொருள் ஈட்டுவதில் புதிய பாதையை வகுத்துக் கொள்வீர்கள், கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும், வீட்டில் சுப கருமம் நடைபெறுவதற்கும் இடமுண்டு, தித்திப்பான தினம்.

இடபம்: இதயத்தில் எரிமலை குமுறும், உன் வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும், குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், ஆணவப் போக்கினால் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிக்க நேரிடலாம்.

மிதுனம்: நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல்வாதிகள் அதிர்ஷ்டதேவதையை அணைத்துக்கொள்வார்கள்.

கடகம்: உள்ளம் உவகையால் துள்ளும், உறவு முறைகளில் இறுக்கமேற்படும், புதியவர் ஒருவரின் தொடர்பு உங்களுக்கு புதுப்பாதையைக்காட்டும், அறவழியில் நாட்டத்திற்கு இடமுண்டு.

சிங்கம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும், அரசியல்வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும், வரவிலும் தடை உண்டு.

கன்னி: காதல் விவகாரங்கள் தலைதூக்கும், இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு, பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும், கண்ணியமானதினம்.

துலாம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவுபார்க்கப்படும், தொழில் துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்குச் சதி நடைபெறலாம், அகாலபோசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்பட முடியும்.

விருச்சிகம்: வசதிகள் பெருகும், வரவிலும் திருப்தி ஏற்படும், செல்வாக்குப் பெருகும், செல்வாக்குப்படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான பலனைத்தரும்.

தனு: தொழில் பகுதியில் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கலாம், எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் உண்டு, சிலருக்கு திடீர் இலாபங்களுக்கும் இடமுண்டு.

மகரம்: பூமியால் லாபம் உண்டு, புத்திரர் புகழும் சேரும், பொதுசன தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும், உடல் நலம் பாதிக்கக்கூடுமாகையால் வாய்வுப்பதார்த்தத்தை நீக்கிக்கொள்ளவும்

கும்பம்: திருடர் பயத்துக்கு இடமுண்டு, தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும், தொழில் புரியும் இடத்தில் சக தொழிலாளர்களுடன் ஒத்துழைப்பது அவசியம், பொறுமையைப் பேணவும்.

மீனம்: சிறிவரும் கோபம் உங்களை நிலைதடுமாறவைக்கும், தானிய நஷ்டத்துக்கும் இடமுண்டு, அடக்கமும் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் தன்மையும்வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

தெல்லிப்பழை ஆயுதமுனைக் கொள்ளை

# மற்றொரு நபரும் அடையாளம் காணப்பட்டார்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழையில் ஆயுத முனையில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக மற்றுமொருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோது அவர் அடையாளம் காணப்பட்டார்.

தெல்லிப்பழையிலுள்ள காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. க. குலசேகரத்தின் வீட்டினுள் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளையர்கள் அவரையும், மனைவியையும் மிரட்டி வீட்டிலிருந்த பெறுமதி வாய்ந்த நகைகளை கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இக் கொள்ளையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டு சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்டுவந்த நெடுந்தீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கைலாயநாதன் என்னும் சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸில் சரண் புகுந்ததையடுத்து மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார்,

மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. உலகநாதன் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடந்தது. அச்சமயம் நடேஸ்வரக் கல்லூரி அதிபர் இவரை அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து இவா மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்

இந்த நபர் மேற்படி கொள்ளையின்போது வீட்டைக் காவல் காத்துக் கொண்டு வெளியே நின்றவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் இவர் வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவரா? என பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு அடையாள அணிவகும்பிலும் அடையாளம் காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

# வீட்டைக் கொளுத்தினராம்

## பெண்களுக்கு விளக்கமறியல்!

[ஊர்காவற்றுறை]

புங்குடுதீவைச்சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா என்பவர் தனது வீட்டை அதே ஊரைச் சேர்ந்த தங்கத்துரை தவமணியும், ஆனந்தன் தங்கம்மாவும் கொளுத்தியதால் வீடு முற்றாக எரிந்து சாம்பராகி ரூபா பத்தாயிரம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டின் மீது புலன்விசாரணை செய்த பொலிசார் இருபெண்களையும் கைதுசெய்து ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி, கே. என். திலகன் முன்னிலையில் ஆஜர் செய்து விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

கைக்குழந்தைகளோடு நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட இரு பெண்களையும் அடுத்தமாதம் 11ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரிகளான இரு பெண்களின் சார்பிலும் சட்டத்தரணிகள் எஸ். கே. மகேந்திரன், ப. கதிரவேலு ஆகியோர் ஆஜராகினா.

# அரசஅதிபர் பாராட்டு

(கிளிநொச்சி)

''இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே எப்போதும் நெருங்கிய நல்லுறவே நிலவி வருகின்றது. இந் நல்லுறவு இத்தகைய அன்பளிப்புக்கள் வழங்கப்படுவதன் மூலம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது''

இவாறு யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா சென்னை றோட்டறி கழகத்தால் கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட அங்கவீனர்களுக்கான முச்சக்கரவண்டியில் ஒன்றை கிளிநொச்சி குருகுலத்திற்கு கையளித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கிளிநொசசி, பரந்தன் றோட்டறிக்கழகத்தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இக்கையளிப்பு வைபவத்தில் யாழ் அரச அதிபர் றோட்டறிக் கழகங்களின் சேவைகளையும் பாராட்டினார்,

தலைவர் திரு. வி, ரீ. சிவலிங்கம தனது உரையில் சென்னை றோட்டறிக்கழகத்துக்கு நன்றி தெரிவித்ததுடன் அக்கழகம் ஊடாக சேதமடைந்த யாழ் நூலகத்துக்கு இந்தியாவிலிருந்து நூல்களைப் பெற நடவடிக்கை எடுத்துவருதாகவும் தெரிவித்தார். (கி)

# விபத்துநிதி

(புலோலி)

அல்வாய் வடக்கைச் சேர்ந்த சிவல் தொழிலாளியான ஆ. பாரதிதாசன் மரத்தினல் விழுந்து மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது குடும்பத்திற்கு விபத்து நிதியாக 400 ரூபாவை வடமாகாண தெங்குப் பணம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் வழங்கியுள்ளது. [இ]

# புனரமைப்பு

(புலோலி)

தேவரையாளி யாழ்டன் விளையாட்டுக் கழகம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவரக திரு. வே. த. ஐயாத்துரையும், உப தலைவராக திரு. மா. தர்மரத்தினமும், செயலாளராக திரு. க. குணராசாவும், பொருளாளராக திரு. க. நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியா சு. க. (சிறிமா) அமைப்பாளர்

(வவுனியா)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் (சிறிமா பிரிவு) வவுனியா அமைப்பாளராகவும், தொகுதி கிளைத்தலைவராகவும் திரு. நடராசா தெரிவாகியுள்ளார். கட்சி உறுப்பினர்களும் அபிமானிகளும் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் திரு. நடராசா உரையாற்றினார்.

கஸ்டப்படும் ஏழை மக்களுக்கு சுயநலம் இல்லாமல் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பெரும் பாடுபட்டவர். கட்சியின் தலைவராகவும் பிரதமராகவும் பல காலம் இருந்து சேவை செய்த இவரது குடியுரிமையை மீண்டும் பெற்றுக்கொடுப்பது கட்சியின் கடமையாகும் என அவர் தமது உரையில் கூறினார்.

உறுப்பினர்கள் கட்சிக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருந்து உழைக்க வேண்டும், என கூட்டத்தில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது. (இ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

33 ஸ்ரீ 3000 தொடர்பிலக்க ஒஸ்டின் சேம்பிறிஷ் வான், ஹொன்டா 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. நா. சாம்பசிவம், அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (2039)

சண்டிலிப்பாய் — சங்கானை ரோட்டில் 7ம் கட்டையில் உள்ள ஐயனார் வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற ஐந்து, பத்து அல்லது இருபது பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 112, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி; 7200, 2094

நல்லநிலையிலுள்ள EY 9551 இலக்கங் கொண்ட A-30 கார் விற்பனைக்குண்டு. விபரம்: அ. உமாசங்கர், 19, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 2114

பலாலி விமான நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் 100 பரப்புக் காணி கல்வீட்டுடன் விற்பனைக்குண்டு. இரண்டு துண்டுகளாக விற்கப்படும். செம்மண் தறை, சுற்றுமதில், ஆழமான இரு கிணறுகள், பயன்தரக் கூடிய மரங்கள் உண்டு. இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு காற்றாடி இயந்திரங்களும் 5000 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கிகளும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு: 399, பிரதான வீதி, சுண்டிக்குளி. (2076)

## தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் உயர்ந்த வேளாள குடும்பத்தைச் சேர்ந்த குடிப்பழக்கம் இல்லாத கொழும்பில் வசிக்கும் கட்டிட மதிப்பாளருக்கு (Quantity Surveyor) பெற்றோர் பெண் தேடுகின்றார்கள். பெண் அழகானவராகவும் வயது 27 முதல் 33 வரை உள்ளவராகவும் இருக்க வேண்டும். குடும்ப விபரம் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2091, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம், 2091

யாழ். நகரில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு கீழே குறிக்கப்படும் தகமைகளையுடைய ஒருவர் உடனடியாகத் தேவை. வர்த்தகவியல், கணக்கியலில் திறமைச் சித்தி, வர்த்தக நிறுவனக் கணக்குகள் ஆங்கிலத்தில் எழுதக்கூடிய தகுதி. ஐந்தொகை கணிக்கும் அறிவு. கணக்குப் பரிசோதனை நிறுவனங்களில் வேலைசெய்த அனுபவம். விண்ணப்பதாரர் தாம் கோரும் சம்பள விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் மாசி மாதம் 5ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2105, மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 2105

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி, வெல்டிங் பயிற்சி 03.02.82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2116

## தேவை

கட்டிடம் மேற்பார்வை செய்வதற்கும் கணக்குகள் எழுதுவதற்கும் ஒருவர்தேவை 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும், நேரில் வந்து சந்திக்கவும். (அனுபவ பத்திரம், சான்றிதழ், கல்வித் தகமைகளும்) முகவரி தேவி பிளாசா வேலைத் தலம், 28, ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம் 2133

## விளம்பரம்

சாவகச்சேரி நவீன பஸ் நிலையக் கொட்டகையில் மேல் பகுதியில் காலியாகவுள்ள இடங்களும், சுற்றுமதிலிலுள்ள மேல் பகுதியில் காலியாகவுள்ள இடங்களும் விளம்பரம் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

1. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 16.2,82 பி. ப. 4.00 மணி வரை.

2. கேள்விப்பத்திரங்கள் 15.2.82 நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

3. கேள்விப் பிணைப் பணம் ரூபா 250/—

4. கேள்விப்பத்திரப்பணம் ரூபா 25/—

மேலதிக விபரங்களைச் சபையின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்,

சி. க. மயில்வாகனம்,
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
28—1—82,
2129

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடம்

**முகாமையாளர் கடன் உதவு சந்தைப்படுத்தல் தரம் - II**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ் மாவட்டப் பகுதியிலுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

காரியாலயத்தில் ரூபா 2/— செலுத்தி விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15—2—82.

சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

பொது முகாமையாளர்
25—01—82,
2123

# மூன்று காலி இடங்களுக்கு ஐந்நூறு விண்ணப்பங்கள்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி தெற்கு, பூநகரி சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் காலியாக உள்ள கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கு மூன்று கிராம சேவையாளர்களைத் தெரிவுசெய்வதற்கு யாழ். மாவட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 500க்கும் அதிகமான விண்ணப்பங்கள் வந்துசேர்ந்துள்ளன. இவ்விண்ணப்பங்களுக்கான நேர்முகப் பரீட்சை பெப்ரவரி முற்பகுதியில் யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கின்றன. இந்தநேர்முகப்பரீட்சைக்கான அறிவித்தல்கள் பெப்ரவரி முதல் வாரத்தில் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன.

# சரித்திர கலாச்சார. . .

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு கொண்டோர் யாபேரும் பங்கு கொண்டாலன்றி இதனை நிறைவேற்றுவது கஷ்டமாகும். இதில் மக்களின் விசுவாசமான செயற்பாடு இன்றியமையாதது. பிற்போடக் கூடியதல்ல.

முன்னோர்சேகரித்துவைத்த, எழுதி வைத்தவற்றிலிருந்தும் நட்ட மரங்களிலிருந்தும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாம் பிரயோசனம் - நன்மை பெறுகின்றோம். எழுதிவைத்தவற்றைக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றோம். குறைநிறை கூறுகின்றோம். நட்ட மரங்களிலிருந்து கனிகளைப் பெறுகின்றோம். வேம்பு, பலா, பனை தறித்து எமது வீட்டுத் தேவைகளுக்கு உபயோகிக்கின்றோம். அல்லது விற்று பணம் பெற்று செலவு செய்கின்றோம். ஆனால் அவர்களது தலைமுறையினரான நாம் எவ்வகையான பயன்தரும் மரங்களை நட்டு உண்டாக்கி உள்ளோம்? புதியனவற்றை எழுதாவிட்டாலும் மறைந்து இருப்பனவற்றை அழிந்தொழியாது, மறையாமல் இருக்க என்ன செய்யலாம்?

யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம், மகாவம்சம், வன்னிபற்றிய விபரத்திரட்டு, (Manual of Wanni) என்பவை இல்லாவிட்டால் பழையவற்றை எப்படி அறிந்திருக்கலாம். கர்ண பரம்பரைக் கதைகளுடன் எழுத்து வடிவில் உள்ளவை நல்ல சாட்சி பகரும் ஆவணங்களாக அமையுமல்லவா? இன்று ஆங்கிலேய அரச அதிபர்கள் பொதுத் தினப்பதிவேட்டில் (General Diary) நாம் எழுதியவற்றில் கூறப்பட்ட விபரங்களை வைத்தே பல முக்கிய தகவல்களும் பெறப்பட்டு, பழைய நிர்வாக, பொருளாதார சமூக விஷயங்களை அறிகின்றோம். றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயன் தான் சிறைப்பட்டு தப்பிஓடின பின் எழுதியபுத்தகத்தை சிங்கள மக்கள் தமது முன்னோரின் வாழ்க்கை, கலை, கலாச்சாரம் ஆட்சிபற்றி அறிய உபயோகிக்கின்றனர். ஆர். எல். புரோசியர் எழுதிய 'பண்டய நீர்ப்பாசன வேலைகள்' என்ற நூலும் பயனுள்ள நூல்களில் ஒன்றாகும், பழமை அறிந்து பெருமிதம்கொள்ள பழமையைக் கூறுபனவற்றை எடுத்து பேணிக் காப்பற்றவேண்டும். என்பது மற்றவர்கள் சொல்லாமல் கேளாமல் நாம்செய்ய வேண்டிய பொறுப்புள்ள பணி யல்லவா?

(மிகுதி நாளைவரும்)

## கலைஞர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பு இன்று குன்றி வருகிறது. இந்நிலை மாறவேண்டும்.

இசைக் கச்சேரிகளில் தமிழ் மொழிப்பாடல்களுக்கும் அதிக இடம் அளிக்க கலைஞர்கள் முன்வரவேண்டும். அதன் மூலம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவ முடிவதுடன் தமிழ்ப் பாடல்களை மக்கள் அறியவும். அவற்றின் திறனை உணரவும் வழி பிறக்கும்'' என்றார்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கட்டாக்காலி நாய் பிடிப்பவர் பதவி

(தரகு அடிப்படை)

இம் மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பகுதியில் கட்டாக்காலி நாய் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு உட்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பிடிக்கும் ஒவ்வொரு நாயையும் கடல் நீரில் அமிழ்த்திக் கொல்லல் வேண்டும். இதற்குத் தாங்கள் கோரும் கட்டணத்தை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 05.02.82ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தமது விண்ணப்பத்தைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

சி. வி. கே. சிவஞானம்
ஆணையாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 20.1.82.
2128

வீட்டுத்தோட்டப் போட்டி

## பரிசளிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று காலை திருநெல்வேலி மகளிர் விவசாயப்பாடசாலையில் நடைபெறுகிறது,

யாழ் மாவட்ட உதவிவிவசாயப்பணிப்பாளர் திரு, நா, சிவமுத்துலிங்கம் தலைமையில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் திரு, பி, முத்துக்குமாரசாமி கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார், (இ)

# வாகன வசதி கிடைத்தது

[புலோலி]

பருத்தித்துறைப் பொலிசாரின் நடவடிக்கைகளுக்குப் போதிய வாகன வசதியில்லாமல் இருந்ததைத் தொடர்ந்து பொலிஸ் திணைக்களம், பருத்தித்துறைப் பொலிசிற்குப் புதிய 'ஜீப்' வண்டி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இப்பொலிஸ் நிலையத்தில் முன்னர் ஒரு ஜீப் வண்டி மாததிரமே இருந்தது.

## தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் ஆடியபாதம் வீதியைச்சேர்ந்த கே. கணபதிப்பிள்ளைக்கு எதிராக சுருட்டுத் தொழிலாளர்களான என். காராளசிங்கம், கே. இரத்தினம், ஆர். சோமசுந்தரம், எஸ். வேலாயுதபிள்ளை, ரி. சிவலிங்கம் ஆகியோர் வேலைநீக்கம் செய்யப்பட்டதாக தாக்கலான வழக்கில் தொழில் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

## தலைவர் தெரிவு

(மானிப்பாய்)

மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவு ஞாயிற்றுக்கிழமை மாலை சங்க மண்டபத்தில் தலைவர் திரு. சு. சிவகுரு தலைமையில் நடைபெறவுள்ளது.

தலைவர் தெரிவுக்கு, திரு. சி, பொ. வ. மா. க. ஸ்ரீமுதலியார் குழுவை சேர்ந்த மூவரும் திரு. த. இரத்தினசபாபதி சார்பில் 4 அங்கத்தவரும் உள்ளனர் எனத்தெரியவருகிறது.

## நல்லூர் இராஜதானி


(2 ம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பாக விளங்கிய சங்கிலியன்தோப்பு செட்டியார் சிவன் கோவில் செட்டியாருக்கு இலங்கை அரசை ஆண்ட ஆங்கிலேயரால் விற்கப்பட்டதால் செட்டியார் தோட்டமாக மாறி தற்போது வர்த்தக வலயமாகவும், குடியேற்றத் திட்டமாகவும்: விவசாய விரிவாக்க நிலையமாகவும் உருமாறிக்கொண்டு வருகிறது. சங்கிலிய மன்னன் தினமும் பூஜித்த சட்டநாதசிவன் கோவிலும் பக்கத்தில் அமைந்த அரசன் இல்லமும் ஒல்லாந்தரால் ஒரு காலத்தில் நாசப்படுத்தப்பட்டிருந்தது. இதனை உரிய உரிமையாளர் புதுப்பிக்க தவறியமையால் தற்போதைய நிர்வாகத்தினர் நீதிமன்றத்தில் பிணைகட்டி சீர்செய்து புதுப்பித்ததாக அறியப்படுகிறது. சட்டநாதப் பெருமான் தேரோட்டிய தெரு வீதியெங்கும் காரோட்டமும் கழிவுப் பொருட்களும் காணிக்கைபோன்று தற்போது தினமும் கும்பமாகக் குவிக்கப்படுவதைக் காணக்கூடியதாக விருக்கிறது. அதுமட்டுமல்லாது திவ்விய ஜீவன சங்க மண்டபத்தினதும் சட்டநாத கோவிலதும் புனிதத்தையும் அழிக்கும்வகையில் அரசன் வசித்த இல்லக் காணிகளும் தற்போது துண்டாடப்படுகிறது.

ஒரு புத்தர் சிலைக்கு ஜனாதிபதிவரை செல்லும் நம் அரசியலாளர் நமது மக்களைலேயே நமது பழைமை உறுதிச் சரித்திரச் சான்றுகளும் புண்ணிய புனித பூமியும் அழிக்கப்பட்டு மாற்றுருவாக தினமும் உருமாறிவருவதை புத்தர் சிலைக்கு முந்திய முதன்மை கொடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறின் உலக மக்களுக்கு இலங்கையில் தமிழர் இராஜதானி இருந்தது என்பதை ருசுப்படுத்தமுடியாதவர்களாவோம். பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடையென்றிராது உடன் நடவடிக்கையிலிறங்கி எமது தொல்பொருள் பூமியைக்காக்கவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்.
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குறைந்த சலார்! முதலாவது ஆண்டு நிறைவையொட்டி இச்சலுகை வழங்கப்படுகிறது!!
சகல அளவு போட்டோக்களுக்கும்
ஸ்ருடியோ டில்கா 202, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8 74
பஸ் நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடியில் அமைந்துள்ளது.



காரைநகர் வாரிவளவு அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக விழாவில் எண்ணெய்க் காப்பு வைபவம் இன்று காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெற வுள்ளது. மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று வரும் இக்கோயிலின் இராஜ கோபுரத்தை இங்கு காணலாம்.


## அரிசிஆலை விற்பனைக்கு உண்டு

கிளிநொச்சியில் கோட்டா நெல் குற்றக்கூடிய வசதியுள்ள ஓர் அரிசி ஆலை விற்பனைக்கு உண்டு

தொடர்பு கொள்ளவும்:

விளம்பர இல: 2121,

C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(2121)


## இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம் 29-03-1916



மறைவு 23-01-1980

கல்வளைக் குமரன்

ஐயாத்துரை குமாரசுவாமி

உத்தமி இல்லம்,
கல்வளை, சண்டிலிப்பாய்.

(2138)


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன் ஞாயிறு**

**கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.**

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்**

**[1] ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

**[2] யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்**
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

**[3] குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்**
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்**

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்**
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

**ரவிந்திரா ஸ்டோர்ஸ்**
285, காலி வீதி, வெள்ளவத்தை.

**லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்**
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

**ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்**
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

**நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்**
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**


## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வுமன்றத்தின் ஆய்வரங்கு நாளை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற வுள்ளது. ஆய்வரங்கிற்கு பண்டிட் கே. என். நவரத்தினம் தலைமை வகிப்பார். (கெ)

## இன்று

(அரியாலை)

யாழ்ப்பாணம்பரி.யோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் இன்றுகாலை பரியோவான் ஆலயத்தில் நடைபெறும் திருவிருந்தாராதனையுடன் ஆரம்பமாகும்.

காரைநகர்கசூரிஞ கிறிஸ்தவ ராசறை மன்று இன்று தனது வெள்ளிவிழாவை கோலாகலமாகக் கொண்டாடுகிறது. காலை 9-30 மணியளவில் மன்றில் நன்றி தெரிவிக்கும் வழிபாடு நடைபெறும். தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணத் திருமண்டலப் பேராயர் மகாகனம் டி. யே. அம்பலவாணர் தலைமையில் மாலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

## இன்று தியாகிகள் தினம்

(புதுடில்லி)

மகாத்மாகாந்தி உயிர்நீத்த இன்றைய தினம் இந்தியா முழுவதும் தியாகிகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் உழைத்ததியாகிகளுக்கு இன்று அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. (வெ)

## ஆறுவதுதடவையாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

அண்மையில் மாவிட்டபுரத்தில் வைத்துக் கைதான சந்தேகநபர் சங்கரப்பிள்ளை ஜெய்சங்கர் என்பவர் இச்சம்பவங்களுடன் தொடர்புடையவரா எனவும் பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.

## பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிவோல்வரும் மற்றும் துப்பாக்கிபாவிக்கப்படும் 37 தோட்டாக்கள், றிவோல்வருக்குப் பாவிக்கும் 18 குண்டுகள் ஒரு தட்டச்சு இயந்திரம் தங்கப் பதக்கம் ஆகியனவும் தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் தொடர்டைய சில முக்கிய தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

இதற்கிடையே குருநகரில் அமைக்கப்பட்டிருக்கும் முகாம் ஒன்றில் இரகசியப் பொலிசாரினல் இப்பொழுது விசாரணை செய்யப்பட்டுவரும் மூவரிடமிருந்தும் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்தொடர்பாக பல தகவல்கள் பொலிசாருக்கு கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. இதைத் தொடர்ந்து பொலிசார் உஷார்படுத்துள்ளப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்குரிய இடங்கள். வாகனங்கள் திடீர்சோதனைக்குட்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடற்கரைப் பகுதிகளிலும். கடல் பிராந்தியங்களிலும், கிராமப்புறங்களிலும் முப்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் பலப்படுத்தப் பட்டுள்ளன.

பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் பட்சத்தில் முப்படையினரும் உதவிபுரிவார்கள். (மா)

## இப்படியும் நடக்கிறது

அவன் ஒரு ஏழை நோயாளி.

கடுமையான நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அவன் உயிருக்காகப் 'போராடு'கின்றுன். அவனது உயிரைக் காப்பாற்ற உடனடியாக இரத்தம் தேவை.

எத்தனையோ முயற்சிகள் நடக்கின்றன. ஆனுல் அவனது உயிரைக் காப்பாற்ற — இரத்தம் வழங்குவதற்கு - யாருமே முன் வரவில்லை.

இச்செய்தி மெல்ல, மெல்ல மூலை முடுக்குகளில் பரவுகிறது.

திடீரென ஒரு திருப்பம்.

அந்த ஆஸ்பத்திரியின் டாக்டர் ஒருவர் ஏழை நோயாளியின் உயிரைக் காப்பாற்ற முன்வந்து தனதுஇரத்தத்தையே தானமாக வழங்குகின்றுர்.

ஆஸ்பத்திரி: பருத்தித்துறை (மந்திகை) அரசினர் வைத்தியசாலை. டாக்டர்: பிரசவ வைத்திய நிபுணர் டாக்டர் குழந்தை வடிவேலு.

நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுபவர்கள் டாக்டர்கள்தான். ஆனுல் இப்படியான உயர்ந்த மனிதர்கள் ஆயிரத்தில் எத்தனை?

ஊர்குருவி

## மற்றுமொரு சீர்திருத்தத் திருமணம்

(பச்சிலைப்பள்ளி)

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் முன்னிலையில் சீர்திருத்தத் திருமணமொன்று அறவழிப்போராட்டக் குழுவினரால் நடத்திவைக்கப்பட வுள்ளது.

இச்சீர்திருத்தத் திருமணம் அடுத்தமாதம் மூன்றும் திகதியன்று மாலை 5மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெறவுள்ளது. சீர்திருத்தத் திருமணம் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் ஆகியோர் முன்னிலையாளர்களாகவும், யாழ். மேயர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா வரவேற்பாளர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

## கிளிநொச்சி நகர்த்திட்டம்: 750 ஏக்கர் காணி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகர்த்திட்டத்திற்கு 750 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பட்டினசபைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ். பாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, யாழ். அரசாங்க அதிபர் திருதேவநேசன் நேசையா, மேலதிக அரசாங்க அதிபர்கள் திரு. எம். பஞ்சலிங்கம், திரு. ஏ. எம். குலநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (மா)

## சிவா நாடு திரும்பினுர்

(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் நேற்று கொழும்பு திரும்பினுர்.

## கோப்பாய்த்தொகுதி கூட்டணிக் கிளை இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொகுதியில் த. வி.கூட்டணிக் கிளைஅமைப்பதற்கான கூட்டம் இன்று காலை கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. கிளை அமைப்பதற்கான ஆலோசனைகளை பிரதம அமைப்பாளரும், அபிவிருத்திச்சபை உறுப்பினருமான திரு. நடேசு இராசேந்திரம் வழங்குவார்.

இன்று மாலை இருபாலை கூட்டுறவுச்சங்க மேல்மாடியில் இவர்களுக்கு வரவேற்புக் கூட்டமொன்றும் நடைபெறவிருக்கிறது. (மா)

## இங். இந்தியா...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஓய்வுநாள் 2ம் திகதியாகும்.

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே இதுவரை நடைபெற்ற 5டெஸ்ட்டுகளில் ஒன்றில் இந்தியா வெற்றிபெற்றதும், 4 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும் தெரிந்ததே. (வெ)

## ஆஹாஷாகி புதுடில்லி விஜயம்

புதுடில்லி, ஜன. 29

பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஆஹாஷாகி இன்று புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இவர் இங்கு இந்திய ஜனுதிபதி திரு, நீலம் சஞ்சீவரெட்டி, பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி, வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி.நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்து உலகின் பல்வேறு பிரச்னைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார். (வெ)

## ராணுவ-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமிர்தலிங்கம் அக்கடிதத்தில் ஜனுதிபதியைக் கேட்டுள்ளார்.

இத் தாக்குதல்சம்பவம்குறித்துஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவை இன்று சந்தித்து திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரியவருகிறது. (வெ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.